# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
முன்னிலை: முனைவர் சோ. அய்யார், இ.ஆ.ப., (ஓ)

**முறையீட்டு மனு எண். 191 / பேரூ / 2017**
**ஆணை நாள்:12.12.2018**

**திரு. இ. செல்வராஜ்,**
**இந்திய சுதந்திர கட்சி,**
**ராதாபுரம் தொகுதி செயலாளர்,**
**65, கிழக்குத் தெரு, ஊத்தடி,**
**வள்ளியூர், திருநெல்வேலி மாவட்டம் – 627 117. – முறையீட்டு மனுதாரர்.**

**முன்னாள் பேரூராட்சித் தலைவர்,**
**வடக்கு வள்ளியூர் பேரூராட்சி,**
**திருநெல்வேலி மாவட்டம் மற்றும் பிறர். – எதிர்மனுதாரர்கள்.**

## ஆணை

முறையீட்டு மனுதாரரது, 26.09.17 நாளிட்ட முறையீட்டு மனு 01.10.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண். 191/17 ஆக எண்ணிடப்பட்டது. மேற்படி மனுவில் வடக்கு வள்ளியூர் பேரூராட்சியின் 9–வது வார்டில் சில பணிகளுக்கான ஒப்பந்தம் போடப்பட்டு பணி நிறைவு பெறாமல் உள்ளதாகவும், ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படாமல் முறைகேடு செய்யப்பட்டுள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அறிக்கைகள் பெறப்பட்டும், உரிய விசாரணைகள் மேற்கொண்டும், வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டும் கீழ்க்கண்டவாறான ஆணை வெளியிடப்படுகிறது:-

முறையீட்டு மனுதாரர் வடக்கு வள்ளியூர் பேரூராட்சியின் 9வது வார்டில் 2006 – 2011ம் காலக்கட்டத்தில் சுமார் ரூ.10,50,000/- மதிப்பீட்டில் சில பணிகளுக்கான (சுடுகாட்டு கொட்டகை, நன்மைக்கூடம், எரியூட்டுக்கூடம்) ஒப்பந்தம் போடப்பட்டு இதுநாள் வரை பணி நிறைவு பெறாமலும், ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படாமலும் உள்ளதெனவும் 2001 –2006ம் ஆண்டுகளில் போடப்பட்ட ஆழ்துளைக் கிணற்றை 2006 – 11 காலங்களில் போட்டதாக கணக்குகாட்டி முறைகேடாக பணம் கையாடல் செய்யப்பட்டிருப்பதாக புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சில தகவல்கள் கோரியதன் பேரில் வடக்கு வள்ளியூர் பேரூராட்சியிலிருந்து 01.08.17 நாளிட்ட கடிதத்தின் மூலம் அளிக்கப்பட்ட பதிலில் எழுந்த சந்தேகங்களின் அடிப்படையிலேயே மேற்படி புகார்களை மனுதாரர் எழுப்பியுள்ளார் என்பது முறையீட்டு மனுவுடன் இணைத்துள்ள ஆவண நகல்களிலிருந்து தெரிய வருகிறது. இருப்பினும்,

மேற்படி புகார் மனு குறித்தான விளக்க அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு, வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் 12.10.17 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

மேலும், 05.02.2018 அன்று இம்முறைமன்ற நடுவம் விசாரணைக்கு ஆஜராகி, தங்களது தரப்பிலான விளக்கங்களை பதிவு செய்திடுமாறு இம்முறைமன்ற நடுவம் 10.11.2017 நாளிட்ட அழைப்பாணை மூலம் மனுதாரருக்கும், செயல் அலுவலருக்கும் ஆணையிடப்பட்டது.

வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து வரப்பெற்ற 30.10.2017 நாளிட்ட அறிக்கையில் புகாரில் தெரிவிக்கப்பட்டவாறு 9வது வார்ட்டில் (முன்பு 8வது வார்டு) ரூ.10,50,000/−க்கான நிதி ஒதுக்கீடுகள் எதுவும் பெறப்படவில்லை எனவும் அது தொடர்பாக பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

05.02.2018 அன்று விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், வடக்கு வள்ளியூர், 9வது வார்டு, ஊற்றடி பகுதியில் சுடுகாட்டு மயானத்தில் எரியூட்டு மேடை மற்றும் தொடர்புடைய பணிகளுக்காக ரூ.12,50,000/− நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் தான் மனு அனுப்பிய போது போதிய தகவல் கிடைக்காததால் ரூ.10,50,000/− என குறிப்பிட்டதாகவும், 2006 -11 ஆம் ஆண்டு காலத்தில் ஒப்புதல் செய்யப்பட்டு, மன்ற பதவிக்காலம் முடியும் முன்னரே முழுத் தொகையும் பணி நிறைவு பெறாத நிலையிலேயே வாங்கி விட்டதாகவும், ஆழ்துளை கிணறு அமைக்கும் பணியில் 2001-06ல் போடப்பட்ட ஆழ்துளைக் கிணறையே கணக்கு காட்டி விட்டதாகவும், பணம் எடுத்து விட்டார்கள் எனவும் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். மனுதாரருடன் ஆஜரான அவர் தரப்பிலான சாட்சிகளான திரு. பி. சுரேஷ் சாம்ராஜ் மற்றும் திரு. அமர்நாத் ஆகியோரும் மேற்படி புகார்களையே தெரிவித்து தனது வாக்குமூலத்தையும் பதிவு செய்துள்ளனர்.

இது குறித்து விசாரணைக்கு ஆஜரான செயல் அலுவலர் திரு. நா. பழனி, புகாரில் குறிப்பிட்டுள்ள பணிகள் குறித்தும், விசாரணையின் போது மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட பிறிதொரு புகாரான 2001 – 06ல் நிறுவப்பட்ட குழாய் பைப்புகள் மன்ற பதவிக்காலம் முடியும்போது 2006ல் அகற்றப்பட்டுவிட்டதாக குறிப்பிட்ட புகார் குறித்தும் ஆய்வு செய்து அறிக்கையினை சமர்ப்பிப்பதாக உறுதி அளித்து வாக்குமூலம் சமர்ப்பித்தார். அதனைத் தொடர்ந்து வரப்பெற்ற செயல் அலுவலரது 15.02.2018 நாளிட்ட அறிக்கையில், வடக்கு வள்ளியூர் பேரூராட்சி 9வது வார்டு ஊற்றடி பகுதி வாழ் மக்களுக்காக பெரிய குளம் கரையில் சுடுகாட்டு கொட்டகை ரூ.1.00 லட்சம் மதிப்பீட்டில் 2008 -09 ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரரான திரு. அப்பாதுரை என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதெனவும், பணி முடிவுபெறும் போது ரூ.1,67,000/− மதிப்பீட்டிற்கு பணி முடிக்கப்பட்டுள்ளதெனவும் பேரூராட்சி மன்றத்தால் கூடுதல் தொகை ரூ.67,000/− பொது நிதியிலிருந்து வழங்கிட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2006 -2011 காலகட்டத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போன்று பணி எதுவும் நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சி பணிகள் பொறியாளர் மதிப்பீடு தயாரித்தல், பணி ஒதுக்கீடுக்கு மன்ற ஒப்புதல் பெறல், மதிப்பீட்டிற்கு பேரூராட்சி மன்ற நிர்வாக ஒப்புதல் பெறல் அதன் பின்பு தொழில்நுட்ப அனுமதி பெறல் ஆகிய வழிமுறைகளுக்குப் பின்பே ஒப்பந்தப்புள்ளிகள் கோரிய குறைந்த

ஒப்பந்ததாரருக்கு பணி வழங்க மன்ற அனுமதி பெற்ற பின்னரே வேலை உத்திரவு வழங்கப்படுமெனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பணிகள், பணி ஆய்வாளர் மேற்பார்வையிலும், பொறியாளர் மேற்பார்வையிலும் செய்யப்பட்டு அளவுப் புத்தகத்திலும் பதிவு செய்து பட்டியலிலும் சான்றளித்து, உதவி செயற் பொறியாளரால் மேல் அளவுகள் செய்யப்பட்ட பிறகே பட்டியல் தொகை ஒப்பந்தாரருக்கு வழங்கப்படுமெனவும் இச்செலவினமும் மன்றத்தில் வைத்து அனுமதி பெறப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் 2001-2006ல் போடப்பட்ட ஆழ்துளைக் கிணற்றை 2006 – 2011ல் போட்டதாக கணக்கு காட்டி பணத்தை எடுத்துள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகார் முற்றிலும் அனுமானத்தின் அடிப்படையிலான ஆதாரமற்ற புகார் என செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார் உள்ளாட்சி நிதித் தணிக்கையும் முடிவுற்றுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயல் அலுவலரது 04.05.2018 நாளிட்ட பிறிதொரு அறிக்கையில், பிறிதொரு புகாரான குழாய் பைப்புகள் அகற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட புகார் குறித்து ஆய்வு செய்யப்பட்டதாகவும் 9வது வார்டில் போடப்பட்ட குழாய்கள் அப்பகுதியிலேயே உள்ளதாகவும், எதுவும் அகற்றப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2006–11ல் நடைபெற்ற ரூ.1.67 லட்சம் மதிப்பீட்டிலான சுடுகாட்டு கொட்டகை பணி தொடர்பிலான விளக்கங்கள், ஆவண நகல்கள் செயல் அலுவலரது அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் இம்முறைமன்ற நடுவத்தின் ஆணைகளுக்கிணங்க வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலரது 03.08.2018 நாளிட்ட அறிக்கையில் கூடுதல் விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதில் பேரூராட்சி 9வது வார்டு ஊற்றடி வாழ் பகுதியில் பெரியகுளத்து கரையில் சுடுகாட்டு கொட்டகைப் பணி ரூ.1.00 லட்சத்தில் 2008-09ஆம் ஆண்டு பணி ஒதுக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்பந்ததாரர்கள் யாரும் முன்வராததால் 4து முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 24.11.2010ல் தான் பணி உத்தரவு வழங்கப்பட்டதெனவும், 2008 – 09ஆம் ஆண்டு விலை விகிதத்திலேயே ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதால் 2010 – 11 விலை விகிதத்திற்கு மாற்ற அவசியம் ஏற்படவில்லை என விளக்கமளிக்கப்பட்டுள்ளது. 22.12.2010ல் பணி முடிவுறும்போது ரூ.1.67 லட்சம் செலவு ஏற்பட்டதால், கூடுதல் செலவினம் ரூ.0.67 லட்சத்தினை ஏற்க பேரூராட்சி மன்றத்தால் தீர்மான எண். 812, நாள்: 16.09.2011 ல் அனுமதித்து தீர்மானம் இயற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், செயல் அலுவலரது 03.12.2018 நாளிட்ட அறிக்கையில், மேற்படி பணி தெரிவு செய்யப்பட்டமைக்கான பேரூராட்சி மன்ற தீர்மான நகல், மதிப்பீட்டிற்கான நகல், தொழில்நுட்ப அனுமதி நகல், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட அறிவிப்பு நகல்கள், ஒப்பந்த அறிக்கை நகல், ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்பு நோக்கு படிவ நகல், பணி ஆணை நகல், பணி முடிக்கப்பட்டு பொறியியல் பிரிவினால் தயாரிக்கப்பட்ட பட்டியல் நகல், பணி முடிவு அறிக்கை நகல், திருத்திய மதிப்பீடு நகல், தொழில்நுட்ப அனுமதி நகல், திருத்திய மதிப்பீடு பேரூராட்சி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மான நகல், திருத்திய மதிப்பீட்டின்படி பணியின் மொத்த மதிப்புக்கான பேரூராட்சி மன்ற அங்கீகார தீர்மான நகல் ஆகிய அனைத்து ஆவண நகல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, முறையீட்டு மனுதாரரது புகார்கள் யூகம்/அனுமானத்தின் பேரில் எழுப்பப்பட்டுள்ளது, உறுதியாவதுடன் குற்றச்சாட்டுகள் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்படாததால், செயல் அலுவலரது விளக்க அறிக்கைகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் முறையீட்டு மனு

தள்ளுபடி செய்யப்படுவதுடன் மேல் நடவடிக்கை கைவிடப்படலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்

1. திரு. இ. செல்வராஜ்,
இந்திய சுதந்திர கட்சி
ராதாபுரம் தொகுதி செயலாளர்,
65, கிழக்குத் தெரு, ஊத்தடி,
வள்ளியூர், திருநெல்வேலி மாவட்டம் – 627 117.
2. செயல் அலுவலர்,
வடக்கு வள்ளியூர் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம் - 627 117.
3. திரு. ஆர். சங்கரநாராயணன்,
முன்னாள் பேரூராட்சி தலைவர்,
வடக்கு வள்ளியூர் பேரூராட்சி, எண். 27, யாதவர் நடுத் தெரு,
வள்ளியூர், திருநெல்வேலி மாவட்டம் - 627 117
4. பிற எதிர்மனுதாரர்கள் / செயல் அலுவலர் மூலமாக
5. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
6. செயலாளர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
7. ஊராட்சி பிரிவு, உதவி பிரிவு அலுவலர்.